செ.வெ.எண் : 251 1/4/08

# செய்திக் குறிப்பு

நெடுஞ்சாலைத்துறை
சென்னை – 9.

01.04.2008 அன்று தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை மூலமாக தயாரிக்கப்பட்ட 2008–09–ஆம் ஆண்டிற்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

இந்த விலை விபர அட்டவணையில் சாலைப் பணிகளுக்கான சரளைக் கற்களுக்கு சென்ற ஆண்டு விலையை விட 14 சதவீதம் கூடுதலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், பணியாளர்களுக்கான கூலி 10.5 முதல் 12 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நடப்பாண்டிலிருந்து ஒப்பந்த மதிப்பு ரூ. 25 இலட்சத்திற்கு மேற்பட்டும் ஒப்பந்தக்காலம் 6 மாதத்திற்கும் கூடுதலாக உள்ள பணிகளுக்கு சிமெண்ட், ஸ்டீல், தார் மற்றும் பெட்ரோலியம் பொருட்களுக்கு விலை மாற்றத்திற்கேற்ப ஒப்பந்தக்காரர்களுக்கு தொகை உயர்த்தி/குறைத்து வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 14.03.2008 அன்று ஆணை பிறப்பித்தார்கள்.

இந்த புதிய நடைமுறையினால் ஒப்பந்தக் காரர்களுக்கு விலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் நீக்கப்பட்டு பணிகள் துரிதமாக முடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை இவ்வாறாக விலை விபர அட்டவணை ஒவ்வொரு நிதியாண்டிலும் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டு வந்தது.

சென்ற ஆண்டு மே மாதம் இரண்டாவது வாரத்தில் வெளியிடப்பட்டது.

ஆனால், இந்த ஆண்டு அதாவது 2008–2009–ம் நிதியாண்டின் துவக்க நாளான ஏப்ரல் 1–ம் தேதி அன்றே விலை விபர அட்டவனை வெளியிடப்படுவது இதுவே முதல் முறையாகும்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.